**ஹங்குரன்கெத பிரதேச சபை – 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹங்குரன்கெத பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹங்குரன்கெத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களில் 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 10,346,445 கூட்டுத்தொகையான சொத்துக்கள் மீதிகள் விடுபட்டும் ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 61,170 ஆன செலவினம் குறைத்துக் காண்பித்தும் காணப்பட்டன. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிதிச் சுற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) டிஜிட்டல் நூலக அபிவிருத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனமொன்றின் மூலம் தியதிலக நூலகத்திற்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த 06 புதிய டெப்லட் கணினிகள் மற்றும் நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம் என்பவற்றின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் ரூபா. 130,963 பெறுமதியாக நிதிக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த 62 காணி மற்றும் கட்டிடங்கள் அலகுகளின் பெறுமதி ரூபா 25 முதல் ரூபா 5,000 வரையான வீச்சில் காணப்பட்டன. | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு அடுத்த ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 1,543,252 தொகை நடைமுறைப் பொறுப்புக்களாகக் காண்பிக்கப் படாமல் நீண்ட காலப் பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கடன் மூலதனம், நீண்ட கால மற்றும் குறுங் காலம் என இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | ரூபா 1,023,000 ஆன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கீழும் ரூபா. 98,961 ஆன ஆயுதங்கள் கருவிகள், இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா. 9,080 எனவும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கீழ் ரூபா 89,881 ஆகவும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் 06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கிடையே ரூபா 1,276,328 ஆன வேறுபாடுகள் காணப்பட்டது. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகளில் வேறுபாடு தொடர்பாக ஆராய்ந்து உரிய அட்டவணை அல்லது நிதிக்கூற்றுக்கள் சீராக்கம் செய்யப்பட வேண்டும் |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 3,701,112 கூட்டுமொத்தமான 08 கணக்கு விடயங்ளுக்குரிய கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | சீராக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்காக தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 876,978 ஆக இருந்ததுடன் அதனோடு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,972,042 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் ஜனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,386,737 ஆன நிலுவை வீதவரிகளில் இருந்து 2022 ஆகஸ்ட் 31 வரை 999 அலகுகளிலிருந்து ரூபா 904,383 ஆன வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீதவரித் தொகையை அறவிடுவதற்காக 06 அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் இடம் பெற்றுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக ஏனைய கொடுப்பனவுகளைத் தவிர்ப்புச் செய்த நபர்களுக்காக அறவிடும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய மந்தாரம்நுவர நூலகம் அமைந்துள்ள விளையாட்டரங்கை சந்தை பூமியாக அபிவிருத்தி செய்வதற்கு 2014 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாடு களிலிருந்து ரூபா 4,000,000 ஆன செயற்திட்டம் பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப் பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டு 07 ஆண்டுகள் கடந்திருந்தன. சந்தை பூமியை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக | எதிர்காலத்தில் நிதி ஏற்பாடு கிடைத்ததன் பின்னர் இந்த இடம் அபிவிருத்தி செய்யப்படுவதாகவும் தற்போது இவ்விடத்தை சபை பயன்படுத்திய போதும் உரித்து இல்லாததால் காணியைக் கையேற்பதற்காக நடவடிக்கை இடம் பெற்று வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | சந்தையை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

சபையினால் உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்திடம் இருந்து கோரப்பட்ட நிதியேற்பாடு கிடைக்காமை காரணமாக 2022 ஆகஸ்ட் வரையிலும் சந்தை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஹங்குரங்கெத சுடலைச்சாலைக்கு நுழைவோருக்குத் தரித்திருப்பதற்கு ரூபா 1,000,000 செலவில் இல்லம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் வீட்டு தளம் தயாரிக்கப்படாத காரணத்தால் அப்பகுதியை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டியதாகக் காணப்பட்டது. அவ்வாறே தற்போது பயன்படுத்தப்படும் சுடலைச் சாலையின் கூரை திருத்தம் செய்யப்பட வேண்டியதுடன் சுடலைச்சாலையின் மலசலகூடமும் திருத்தம் செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. | விசாரணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள சுடலைச் சாலையின் கூரை மலசலகூட முறைமை மற்றும் வீட்டுத் தளம் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுடலைச்சாலையின் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |